PR: 488 DT: 12/07/2011

சென்னையில் உள்ள பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மாணவ, மாணவியர் விடுதிகளை மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் திரு முஹம்மத் ஜான் அவர்கள் 11-7-2011 அன்று திடீர் ஆய்வு மேற்கொண்டார்கள்.

மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் உத்தரவிற்கு இணங்க மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் திரு முஹம்மத் ஜான் அவர்கள் சென்னையில் உள்ள லேடி வெலிங்டன் கல்லூரி மாணவியர் 1 மற்றும் 2 விடுதிகளை ஆய்வு மேற்கொண்டபோது மாணவியர்களை சந்தித்து அவர்களின் குறைகளை கேட்டறிந்தார். கூடுதலாக தேவைப்படும் கழிப்பறை வசதிகள், குடிநீர் வசதிகள் தேவைகளை அமைத்துக் கொடுக்க சம்மந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார். பின்னர் மாணவியர்கள் சாப்பிடும் உணவின் தரத்தை அறிய உணவினை சாப்பிட்டு பார்த்தார்.

அதன்பின்பு சைதாப்பேட்டையில் உள்ள பிற்படுத்தப்பட்டோர் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் கல்லூரி மாணவர் விடுதியினை ஆய்வு செய்தார். அப்போது கழிவறைகள் மற்றும் திறந்தவெளி பகுதிகளை சுகாதாரமாக அமைக்க உத்தரவிட்டார். பாதுகாப்பற்ற நிலையில் உள்ள மின் சாதனங்களை மாணவர்களின் பாதுகாப்புக் கருதி உரிய நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார். மாணவர்கள் ஓய்வு நேரத்தை பயன் உள்ளதாக அமைத்துக் கொள்ள அறிவுரைகள் கூறினார்.

அதன்பின்னார், கிண்டியில் உள்ள அரசு மிகவும் பிற்படுத்தப்பட்டோர் கல்லூரி மற்றும் தொழிற் நுட்ப கல்லூரி மாணவர் விடுதியினை ஆய்வு செய்தார். இந்த விடுதி கடந்த ஆட்சி காலத்தில் பாதுகாப்பற்ற முறையில் மேற்கூரை கட்டப்பட்டுள்ளதால், மாணவர்களின் நலன் கருதி உடனடியாக அவைகளை சரிசெய்ய சம்மந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். பின்னர் இவ்விடுதிக்கு சுற்றுசுவர் அமைக்கவும், மழைக்காலங்களில் குடி நீர் தொட்டியில் கழிவு கலந்து விடுவதால், தொட்டியின் உயரத்தை உயர்த்தி கட்டவும், கழிப்பறையை சுத்தமாக வைத்துக் கொள்ளவும், கொசுத் தொல்லைகளிலிருந்து விடுபடவும், உரிய நேரத்தில் அட்டவணைப்படி உணவு வழங்கவும் சம்மந்தப்பட்டவர்களுக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிட்டார்.

இந்த ஆய்வின்போது பிற்பட்டோர் நலத்துறை இயக்குநர் திரு ஜெ. சந்திரகுமார், இ.ஆ.ப., சென்னை மாவட்ட பிற்பட்டோர் நல அலுவலர் திரு கோவிந்தசாமி உட்பட அரசு அலுவலர்கள் உடன் இருந்தனர்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9